MCOP.No. 265/22
Date : 25.07.2025
Pw – 1
பெயர்: கவிதா
க/பெ: பழனிசாமி

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் கண்ட சங்கதிகளை நான் படித்து பார்த்துதான் கையெழுத்து செய்தேன். மனுவில் 2ம் எதிர்மனுதாரருக்கு கீழ் காப்பீட்டு எண் என்று 2815 2020 9993 4000 0736 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். விபத்து சமயத்தில் நான் எனது கணவருடன் பயணம் செய்யவில்லை. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. விபத்து சம்மந்தமாக நான் தான் புகார் கொடுத்தேன். விபத்தை நான் நேரடியாக பார்க்காததால் விபத்து எப்படி நடைபெற்றது என்பது குறித்து என்னால் கூற இயலாது என்று சொன்னால் சரிதான். எனது கணவருக்கு விபத்து சமயத்தில் இரு சக்கர வாகனத்தை ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது. அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அவர் ஓட்டி சென்ற இரு சக்கர வாகனம் எனது கணவருக்கு சொந்தமானது தான். அந்த இரு சக்கர வாகனத்திற்கு பதிவு சான்றிதழோ விபத்து சமயத்தில் காப்பீட்டு நிலுவையில் இருந்து வந்ததை காட்டுவதற்குரிய காப்புறுதி சான்றிதழோ நான் தாக்கல் செய்யவில்லை. ம.சா.ஆ.9 சான்றாவணம் ஜெராக்ஸ் நகல் ஆகும். 1ம் எதிர்மனுதாரர் இந்த வழக்கில் என்ன கட்சி எடுத்துள்ளார் என்று எனது வழக்கறிஞரை கேட்டு நான் தெரிந்து கொண்டேன். ம.சா.ஆ9 காப்புறுதி சான்றிதழின் உண்மை நகலை பெறுவதற்கு நான் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. என்னிடம் காட்டப்படும் 2815 2020 99934 0000 734 என்ற எண் கொண்ட பாரதி ஆக்ஸா நிறுவனத்தால் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு 09.06.2020 முதல் 08.06.2021 வரையிலான காலத்திற்கு வழங்கப்பட்ட காப்புறுதி சான்றிதழ் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் சரக்கு ஏற்றி செல்லக்கூடிய லாரி என்ற விபரம் எனக்கு தெரியும். ம.சா.ஆ9 சான்றாவணத்தில் காப்புறுதிக்கான கூடுதல் தொகையும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள SGST மற்றும் CGST கூடுதல் 18% தொகையும் தவறாக கணக்கிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ9 சான்றாவணமானது இழப்பீடு பெறுவதற்காகவே அந்த காப்புறுதி சான்றிதழுக்கு முன்பு வழங்கப்பட்ட சான்றிதழை அனுசரித்து சிறு சிறு மாற்றம் செய்து 1ம் எதிர்மனுதாரருடன் வஞ்சக கூட்டு வைத்து போலியாக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் ம.சா.ஆ.9 சான்றாவணத்தின் உண்மை நகலை சம்மந்தப்பட்ட காப்புறுதி நிறுவனத்தில் கோரி பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரான காப்புறுதி நிறுவனம் சரக்கு வாகனங்களுக்கு எந்த சமயத்திலும் காப்புறுதி

செய்வதில்லை என்பதால் 1ம் எதிர்மனுதாரரின் லாரிக்கும் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் காப்பீடு செய்திருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து எனக்கு எந்தவித இழப்பீடும் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் மாதம் ஒன்றுக்கு ரூ.30000/– வருமானம் பெற்று வந்ததை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். ம.சா.ஆ12 பாஸ்போர்ட் ஆவணத்தில் கண்டுள்ள எனது கணவரின் பிறந்த தேதி 11.07.1972 என்பது சரியானது தான். மேற்படி ம.சா.ஆ.12 பாஸ்போர்ட் ஆவணம் தான் எனது கணவருக்குரிய கடைசி பாஸ்போர்ட் ஆவணம் என்று சொன்னால் சரிதான். அந்த பாஸ்போர்ட் ஆவணத்தின்படி 12.05.2017 தேதி வரையில் அவர் வெளிநாட்டில் தங்குதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். 2017 வருடத்திற்கு பிறகு எனது கணவர் வருமானம் பெறும் வகையில் வெளிநாட்டில் வேலை செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்குரிய அனுமதி சீட்டை நான் தாக்கல் செய்யவில்லை. எனது கணவருக்கு தலையில் அடிப்பட்டுதான் இறந்து போனார். எனது கணவர் அந்த சமயத்தில் தலைகவசம் அணிந்திருந்தால் ஒருவேளை அவருக்கு மற்ற பாகங்களில் மட்டும் காயம் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது. விபத்து சமயத்தில் எனது கணவர் தலைகவசம் அணியாததால் தான் தலையில் ஏற்பட்ட காயத்தினால் இறந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் சம்பவ இடத்தில் வைத்து இறந்தாரா? அல்லது மருத்துவமனைக்கு கொண்டு சென்ற பின் இறந்தாரா? என்ற விபரம் எனக்கு தெரியாது. தாவா விபத்து எனது கணவரின் அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்து சம்மந்தப்பட்ட குற்ற வழக்கில் எனது கணவருக்கு எதிராக தீர்வு காணப்பட்டதால் தான் குற்ற இறுதி அறிக்கையை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் 2ம் எதிர்மனுதாரருக்கு ஆதரவாக மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

Sd/– கவிதா

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.